செ.வெ.எண்:35 நாள்:14.09.2018

# அரியலூர் மாவட்டத்தில் கர்ப்பிணித்தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா நிகழ்ச்சியை மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா திரு.தாமரை.எஸ்.ராஜேந்திரன் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

அரியலூர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் சார்பில் கர்ப்பிணித்தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா நிகழ்ச்சி மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா **திரு.தாமரை.எஸ்.ராஜேந்திரன்** அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் முன்னிலையில் இன்று (14.09.2018) நடைபெற்றது.

**இந்நிகழ்ச்சியை, குத்துவிளக்கேற்றி விழாவை தொடங்கி வைத்து, அரியலூர் வட்டத்தைச் சேர்ந்த 160 கர்ப்பிணித்தாய்மார்களுக்கு மாலை அணிவித்து, தாம்பூலம் தட்டு, ஜாக்கெட்துணி, பழம், பூ, வெற்றிலைப்பாக்கு, குங்குமம், வளையல்கள் அடங்கிய பொருட்களை வழங்கி, சமுதாய வளைகாப்பு விழா செய்யும் நிகழ்ச்சியினை மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்கள் தொடங்கி வைத்து பேசியதாவது :-**

இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் பெண்களின் நலனுக்காக ஏராளமான நலத்திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. கர்ப்பிணித்தாய்மார்களுக்கு கருவுற்ற தாய்மார்கள் அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பதிவு செய்தவுடன், மூன்று தவணைகளாக ஒவ்வொரு கர்ப்பிணித்தாய்மார்களுக்கும் ரூ.18,000/- நிதியுதவியும், 16 வகையான குழந்தைகள் நல பரிசுப்பெட்டகங்களும் அளித்து, தாய்மார்களின் நலனைக்காக்கின்ற அரசாக தமிழக அரசு விளங்குகிறது. இதுபோன்ற சிறப்பான திட்டங்களின் வரிசையில் தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு செய்யும் நிகழ்ச்சி நடத்தி அவர்களுக்கு ஐந்து வகையான கலவை சாதங்கள் வழங்கி அரசு சார்பில் நடத்தப்படுவது மிகவும் சிறப்பான ஒன்றாகும்.

நமது மாவட்டத்தில் இன்றைய தினம் 6 ஊராட்சி ஒன்றியங்களிலும் இதுபோன்ற நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறுகிறது. பெண்களுக்கு சத்தான உணவு மற்றும் பயிர் வகைகள் இவைகளோடு தரமான மருத்துவச் சிகிச்சையும் அளிக்கப்படுகிறது. பேறுகாலத்தில் தாய்மார்கள் நலமுடன் இருக்க தங்களுடைய உடல் நலத்தை கவனத்துடன் பேணிக்காத்து, ஊக்கமான உணவு முறையினையும், அரசு மருத்துவர்களின் சிகிச்சையினையும் பின்பற்றி பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் என மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா **திரு.தாமரை.எஸ்.ராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் இ.சி.ஹேமசந்த்காந்தி, குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் க.அன்பரசி கடுகூர் வட்டார மருத்துவ அலுவலர் எம்.உமாமகேஸ்வரி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்ட மேற்பார்வையாளர்கள் மற்றும் அலுவலர்கள், ஏராளமான கர்ப்பிணித்தாய்மார்கள், பணியாளர்கள் கலந்துகொண்டார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**